| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 49/2010 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | செங்கோடக்கவுண்டர் | நாள் | 05.03.2021 |
| தகப்பனார் பெயர் | சின்ன நாச்சியப்பன் | | |

11 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

3 முதல் 5 பிரதிவாதிகளை எதற்காக இவ்வழக்கில் சேர்த்திருந்தேன் என்றால் என்னுடைய சொத்தையும் சேர்த்து 6ம் பிரதிவாதி தேவராஜனுக்கு விற்பனை செய்துள்ளதால் சேர்த்துள்ளேன். எப்போது விற்பனை செய்தார் என்றால் வழக்கு தாக்கல் செய்யும் போது தெரிந்து கொண்டேன். 2010ம் வருடமா என்றால் ஆமாம். 1988 ம் வருடம் 3 முதல் 5 பிரதிவாதிகள் 6ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்ததை 2010ல் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அந்த ஆவணத்தை 8வது ஆவணமாக இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். 3 முதல் 5 பிரதிவாதிகள் 6ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்தது செல்லாது என பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் கோரியுள்ளேன். 2010ல் தெரிந்து கொண்ட நான் இதுநாள் வரையில் அந்த ஆவணத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1988 கிரையத்திற்கு முன்பு 3ம் பிரதிவாதி சின்னப்பகவுண்டர் 24.09.1982ல் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் 2010ல் வழக்கு போடும் போது தான் தெரியும். அந்த ஆவணம் மேட்டூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1207/1982 என்ற எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தகுந்த மறுபயனுக்கு வாங்கியுள்ளார் என்பதையும் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். 3ம் பிரதிவாதி உரிமையாளர் என்ற முறையில் 6ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் விற்பனை செய்துள்ளார். 3ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட ஆவணம் செல்லாது என தாவாவில் பரிகாரம் கோரவில்லை என்றால் கோரியுள்ளேன். அவர் ஆஜராகவில்லை. 2010ல் எனக்கு தெரிந்தது எனக் கூறியபோதும் 1982 மற்றும் 1988 பத்திரங்களை ரத்து செய்ய பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் 3 முதல் 5 பிரதிவாதிகள் தோன்றாதரப்பினர்கள் ஆனார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. 2017ல் இவ்வழக்கிற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் வந்திருப்பேன். 3 முதல் 5 பிரதிவாதிகள் 2010லிருந்து கட்சி செய்துவந்தார்கள் எனவும், 2017ல் நான் சாட்சியம் அளித்ததற்கு பின்னிட்டு தான் தோன்றாதரப்பினர்கள் ஆனார்கள் என்றால்

சரியல்ல. பழைய சர்வே எண்.852 புதிய சர்வே எண்.140–க்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். சர்வே எண்.140 என்பது சர்வே எண்.277/5, 277/7 என மாறியதற்கு பின்னிட்டு திருத்துவதற்கு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. திருத்தப்பாடு மனு தாக்கல் செய்யாமல் திருத்தப்பட்ட வழக்குரை 3 வது பத்தியில் மேற்படி சர்வே எண்களை திருத்தியுள்ளேன் என்றால் இல்லை. 3 வது பத்தியில் மட்டும் கூறிவிட்டு சொத்துவிபரத்தில் அந்த சர்வே எண்களை கூறவில்லை என்றால் அந்த சர்வே எண்களை தான் கிரையம் பெற்றதாக கூறி வருகிறார்கள். சர்வே எண்.852 ல் 3.30 ஏக்கர் உள்ளது என்றால் ஆமாம். அதன் மொத்த விஸ்தீரணம் 19.87 ஏக்கர் என்றால் ஆமாம். நான் 1973 ல் கிரையம் வாங்கும்போது சர்வே எண்.852 என்பது 140 ஆக மாறிவிட்டது என்றால் ஆமாம். அந்த சர்வே எண்.140–ல் 2 ஏக்கர் 20 சென்டை விலைக்கு வாங்கியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த ஆவணத்திலும் மொத்த விஸ்தீரணம் 19.87 ஏக்கர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.3–ன் மூலம் 1975 ல் 3 ஏக்கர் 30 சென்டை விலைக்கு வாங்கியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த ஆவணத்திலும் சர்வே எண்.140 ல் மொத்த விஸ்தீரணம் 19.87 ஏக்கர் என கண்டுள்ளது என்றால் ஆமாம். சர்வே எண்.140 ல் வேறு சொத்துக்கள் வாங்கவில்லை என்றால் ஆமாம். என்னுடைய தாயார் அதே சர்வே எண்ணில் 1955 ல் 3 ஏக்கர் 30 சென்டை விலைக்கு வாங்கியுள்ளார் என்றால் ஆமாம். ஆக மொத்தம் 8.80 ஏக்கர் சர்வே எண்.140 ல் விலைக்கு வாங்கியுள்ளோம் என்றால் ஆமாம். சர்வே எண்.140–ல் உள்ள 19.87–ல் நாங்கள் 8.80 ஏக்கரை வாங்கியுள்ளோம் என்றால் ஆமாம். நாங்கள் வாங்கியது போக மேற்படி சர்வே எண்ணில் மீதியுள்ள 11 ஏக்கர் 7 சென்டை யார் வாங்கினார்கள் என்றால் நாச்சப்பகவுண்டர் அவருடைய மாமா, மச்சான் உறவுமுறையில் உள்ள நாச்சியப்பகவுண்டரும் சேர்ந்து வாங்கியுள்ளனர். நாச்சியப்பகவுண்டரின் மனைவி பௌத்தியம்மாள். மேற்படி நாச்சியப்பகவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டு நாச்சப்பகவுண்டரும், பௌத்தியம்மாளும் 1953 ல் பாகபிரிவினை செய்து கொண்டனர் என்றால் ஆமாம். நாச்சப்பகவுண்டரின் மகன் செல்லப்பன் என்றால் ஆமாம். நாச்சப்பனுக்கு பின்னிட்டு அவருடைய மகன் செல்லப்பன்அனுபவித்து வந்தார் என்றால் செல்லப்பன் தான் ஓட்டி வந்தார். அந்த செல்லப்பனிடமிருந்து 3 ம் பிரதிவாதி சின்னப்பகவுண்டர் விலைக்கு வாங்கினார்

என்றால் ஆமாம். அதன்பின்னர் 3ம் பிரதிவாதி சின்னப்பகவுண்டர் மற்றும் அவருடைய மகன்கள் ஓட்டி வந்தனர் என்றால் ஆமாம். அந்த அனுபவித்து வந்த சொத்துக்களை தான் 3 முதல் 5 பிரதிவாதிகள் குடும்ப அவசர செலவிற்காக 6ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றால் அது எங்களுடைய சொத்து. 1982லிருந்து 1988வரை 3ம் பிரதிவாதியின் குடும்பத்திற்கு அனுபவத்தில் இருந்தது எனவும், அதன்பின்னர் 1988ல் 6ம் பிரதிவாதி கிரையம் பெற்றதற்கு பின்னிட்டு 6 ம்பிரதிவாதி அனுபவித்து வந்தார் என்றால் ராமசாமியும், அதன்பின்னர் தேவராஜனும், தேவராஜனுக்கு பின்னிட்டு அவருடைய அம்மா பழனியம்மாள், அதன் பின்னர் ராஜாத்தி மணி அனுபவித்து வருகிறார். அவர்களிடம் அனுபவம் உள்ளதால் நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி செல்லப்பனிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளதால் அது குறித்து நான் கேள்வி எழுப்பமுடியாது எனவும், மேலும் பரிகாரம் ஏதும் கோராத நிலையில் 3 முதல் 5 மற்றும் 9 முதல் 13 பிரதிவாதிகளுக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோரமுடியாது என்றால் சரியல்ல. 2010லிருந்து வழக்கு சொத்தினை யார் அனுபவித்து வருகிறார்கள் என்பது நன்றாக தெரிந்திருந்தும் பொய்யாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் வழக்கு அதிகபட்ச செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்/–எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.